**குருவிட்ட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 20 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 11 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குருவிட்ட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மூலதன வருமானமாகக் கிடைத்த ரூபா 152,329,883 தொகையும் மூலதன செலவினமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 146,073,619 தொகையும் வைப்புக் கணக்கின் மூலம் சீராக்கப்பட்டமையின் காரணமாக மிகை ரூபா 6,256,264 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தலைமை அலுவலகத்திற்கும் உப அலுவலகங்களுக்கும் உரிய முறையே ரூபா 299,701 தொகை மற்றும் ரூபா 1,424 தொகைகளான முற்பணமாகக் கிடைத்த

ஆதனவரி, மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக வருமானம் ரூபா 301,125 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தலைமை அலுவலகத்தின் நிலையான கடை வாடகைப் பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்கிடைப்பனவுகள் ரூபா 8,000 தொகை முற்பணமாகக் கிடைத்த வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 08 கணக்கு விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 36,548,385 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) கிரிஎல்ல உப அலுவலகத்தின் சுதந்திர ஆயுர்வேத மருந்தகத்தின் மருந்து இருப்பு அறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு ரூபா 125,520 ஆக இருந்த போதிலும், மருந்து இருப்புக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 83,975 ஆனமையால் ரூபா 41,545 வேறுபாடு காணப்பட்டது.

(இ) 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் அதற்குரிய குறிப்புக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் இடையே ரூபா 8,284,380 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 20 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன்களின் கூட்டுமொத்தம் ரூபா 41,487 ஆகும்.

(ஆ) கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 7,513,422 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டின் போது சபையினால் நிர்வகிக்கப்பட்ட விருந்தினர் விடுதியில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 9,300 மேலதிகமாகப் பெறப்பட்ட வருமானம் உரிய பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

ரூபா 158,311,538 கூட்டுப்பெறுமதியான 07 கணக்கு மீதிகளின் பெறுமதியைக் காண்பிக்கின்ற விரிவான பட்டோலை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவு | காணி விற்பனையிலிருந்து கிடைக்கின்ற தொகையிலிருந்து 01 சதவீத அளவு சபையின் வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 03 காணி ஏலவிற்பனைக்குரியதாக தீர்மானிக்கப்பட்ட அளவினை விட குறைவாக அறவிடப்பட்டமையின் காரணமாக சபை நிதியத்திற்கு ரூபா 764,444 உரித்தற்றுப் போயிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 13 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 2,923,575 முற்பணத்தைத் தீர்ப்பதற்கு 2016 திசெம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2001 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 13,936,769 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645 | மீளாய்வாண்டிற்காக சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களுக்கு நாளாந்த ஓட்ட அட்டவணை தொடர்ச்சியாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 1996 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய 935/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்த மானியின் மூலம் திருத்தப்பட்ட 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட 1986 இன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டம் மற்றும் கட்டிட கட்டளைகளின் 22 ஆம் கட்டளை | சபை அதிகாரப் பிரதேசத்தில் இடம் பெற்ற 04 காணி ஏல விற்பனைகளுக்குரிய பொதுச் செயற்பாடுகளுக்காக 252 பேர்ச் குறைத்து ஒதுக்கப்பட்டிருந்தது. |

### 1.3.6 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

சபையினால் அமுல்படுத்தப்பட்ட உள்ளக கிராம கமநெகும குறித்த செயற்திட்டத்தின் கீழ் சபை உத்தியோகத்தர்களுக்கும் 09 கமநெகும அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் கூட்டுமொத்தமாக ரூபா 1,187,500 படியாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக பெறப்பட்டிருந்த அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம்

ரூபா 23,301,090 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 88,158,178 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 11,459,268 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 111,459,268 இனால் அதிகரித்தமை தொடர்பில் 04 விடயங்களின் வருமானம் ரூபா 16,865,834 இனால் அதிகரித்தமையும் 04 விடயங்களின் செலவினம் ரூபா 97,856,967 இனால் குறைவடைந்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 2,420 | 1,830 | 4,556 |
| வாடகை | 6,413 | 3,182 | 1,909 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,451 | 2,179 | - |
| ஏனைய வருமானம் | 51,830 | 66,261 | 28,157 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

---

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்கள் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினைவிட முறையே 50 சதவீதம், 37 சதவீதம் மற்றும் 105 சதவீதம் என்ற சதவீதங்களால் அதிகரித்திருந்ததுடன் வீதவரியும் வரியும், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 34 சதவீதம், 55 சதவீதம் மற்றும் 24 சதவீதம் என்ற சதவீதங்களால் குறைவடைந்திருந்தன.

### 2.3.3 ஆதனவரி

---

2016 யூலை 30 ஆந் திகதியளவில் 1,187 ஆதனவரி அலகுகளிலிருந்து ரூபா 4,075,551 நிலுவை ஆதனவரி மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற 750 அலகுகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,233,745 தொகையும் காணப்பட்டது.

### 2.3.4 வாடகை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 யூலை 30 ஆந் திகதியளவில் ரூபா 241,684 நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று அறவிடுவதற்கிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த புதிய சந்தைத் தொகுதியில் 05 கடைகளிலிருந்து ஆரம்பம் முதல் வாடகை செலுத்தாது புறக்கணித்தமையின் காரணமாக 2014 யூலை 30 ஆந் திகதி அக்கடைகள் முத்திரையிடப்பட்டு சபைக்கு கையேற்கப்பட்டிருந்தது. வாடகையாளருடன் உடன்படிக்கை செய்யாதிருந்தமையால் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 4,436,000 கூட்டுத்தொகையான நிலுவை கடை வாடகை மற்றும் தண்டப் பணம் என்பவற்றை அறவிடுதல் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான இயலுமை இல்லாதிருந்ததாகக் காண்பித்து

நிலுவைக் கடை வாடகையை பதிவழிப்பதற்காக விடயபொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் அறவிடவேண்டிய வியாபார நிலையங்களை இனங்காணும் வகையில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிலிருந்து கட்டணம் அறவிடக்கூடியதாக இருந்த போதிலும், சபையினால் அந்த வருமான வழிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஆ) கிரிஎல்ல உப அலுவலகத்தின் மூலம் பேணப்பட்ட 02 நீர் செயற்திட்டங்களில் நீர்ப்பாவனையாளர்களிடமிருந்து 2010 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டிய ரூபா 153,290 கூட்டுத்தொகையான நிலுவை நீர்வரி மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்ததுடன் 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதிய செயற்குழுவின் 1454 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் அந்நிலுவைப் பணத்தை பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. காலரீதியில் கட்டணம் அறவிடுவதற்கு முடியாமையின் அடிப்படையில் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த வருமானத்தை பதிவழித்தல் தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.3.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2016 செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய 03 காணிப்பதிவாளர் அலுவலகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 01 காணிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் சபைக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 1,528,417 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மயான நிலப் பதிவேட்டின் படி சபைக்குரியதாக 42 மயான நிலங்கள் காணப்பட்ட போதிலும், அதில் 41 மயான நிலங்களினை சபைக்கு கையேற்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) கணக்கீடு மற்றும் ஆதனவரி மென்பொருளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த மென்பொருளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரையில் ஓடக்கூடிய நிலையில் காணப்படாத 03 வாகனங்கள் தொடர்பாக பழுதுபார்ப்பதற்கோ அல்லது முறையான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையினை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் கமநெகும நிதியத்திலிருந்து சபைக்கு கூட்டுமொத்தமாக ரூபா 1,934,479 ஆன நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகள் கவனத்திற் கொள்ளப்படாமல் குறைந்த விலை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும் ரூபா 573,032 தொகையான பொருட்கள் பொருட்பதிவேட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

(ஆ) குறுவிட்ட த பினேஸ் புதிய குடியிருப்புக்களில் நீர் செயற்திட்டத்திற்குரிய கிணற்றை அமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களில்

சபை நிதியத்திலிருந்து கூட்டு மொத்தமாக ரூபா 1,582,216 செலவிடப்பட்டிருந்ததுடன், 2016 செப்தெம்பர் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது, கிணற்றிற்குள் துருவுடன் காணப்பட்டமை, கிணற்றின் ஓரத்திற்கும் கிணற்றிற்கும் இடைப்பட்ட சுவரில் அதிகளவில் துருக்கள் ஒட்டியிருந்ததுடன் கிணற்றுக்கள் கொங்கிரீட் தட்டிலுள்ள இரும்புக் கம்பி கொங்கிரீட் தட்டிற்கு வெளியே வெளிப்பட்டு துருப்பிடித்தலுக்கு உட்பட்டிருந்தமை மற்றும் கிணற்றுக்கு குளத்தின் இருபக்கத்திலிருந்தும் நீர் வழிந்தோடி வந்தமையினால் கிணற்றின் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்ற நிலையில் இருந்தமை என்பன அவதானிக்கப்பட்டன.

(இ) 2015 திசெம்பர் 17 ஆந் திகதிய குறுவிட்ட சிறிய நகர நீர் உத்தேசத் திட்டத்தின் குழுக் கூட்ட அறிக்கையின் பிரகாரம் நீர் செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் கூறுவிலை கோரி நீர் பம்பியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான மாதிரிகளை இனங்காணாமலும், கூறுவிலை கோராமலும் நிறைவேற்றுக்குழு அங்கத்தவரினால் வழங்கப்பட்ட சில கூறுவிலைகளுக்கிடையே குறைந்த விலையினை அடிப்படையாகக் கொண்டு பணக் காசோலையின் அடிப்படையில் ரூபா 1,356,000 பெறுமதியான நீர்ப்பம்பியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பம்பி தேவைக்கு இணங்காதிருந்தமை மற்றும் மின்சார இயலளவிற்கு போதுமானதாக இல்லாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டமையினால் செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினத்திற்குள்ளாகியிருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்ட ''(இ)'' பந்தியில் குறிப்பிடப்பட்ட நீர் வழங்கல் உத்தேசத் திட்டத்தின் கீழ் 2015 மார்ச் 03 ஆந் திகதி ரூபா 127,045 தொகையான நீர் துணைப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடங்கியிருந்த 97 நீர்க் குழாய்களில் 92 உம் 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதி வரையிலும் பயனற்று விகாரை வளவில் அமைந்துள்ள நீர் செயற்திட்டத்திற்குரிய களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) சபையினால் அமுல்படுத்தப்பட்ட சிறிய நகர நீர்ச் செயற்திட்டத்தின் இயலளவை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ரூபா 827,561 தொகை தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், சபையினால் கோரப்பட்ட வசதிகள் வழங்கப்படாமையின் அடிப்படையில் மீளாய்வாண்டு வரையிலும் அந்த வேலைகளிலிருந்து எந்தவொரு நலனும் சிறிய நகர

நீர்வழங்கல் செயற்திட்டத்திற்கு கிடைக்கப் பெறாதிருந்ததுடன் அதன் காரணமாக செலவிடப்பட்ட ரூபா 827,561 தொகையும் பயனற்ற செலவினமாகியிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

---------------------------------

(அ) குறுவிட்ட பொது விளையாட்டு மைதானத்திற்கு கூட்டுறவு கட்டிடத்தின் முன்னால் நுழைவு வீதியை அமைத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வேலைப் பெறுமதி ரூபா 969,086 தொகையான மேற்கூறப்பட்ட 02 வேலை விடயங்களின் உள்ளபடியான அளவிடை அளவை விஞ்சி கூட்டுமொத்தமாக ரூபா 9,854 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) விளையாட்டு மைதானத்திற்கு அருகில் வடிகாண் நிர்மாணிப்பதற்காக ரூபா 139,579 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிர்மாணத்தின் பின்னர் விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத்துவதற்காக வடிகாண் உடைத்து அகற்றப்பட்டு மாகாண வீதி அமைச்சரினால் மீண்டும் நிர்மாணிப்பதற்காக ரூபா 565,404 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாகாண அரச நிறுவனத்துடன் சிறந்த தொடர்பின்றி செயற்பட்டமையால் சபை நிதியத்தின் மூலம் செலவிடப்பட்ட ரூபா 139,579 தொகை பயனற்றதாக இருந்தது.

(iii) வடிகாண் மீள அமைக்கப்பட்டமையின் காரணமாக விளையாட்டு மைதானத்திற்கு உள்நுழைவதற்காக நிர்மாணிக்கப்பட்ட வீதி விளையாட்டு மைதானத்தை விட உயர்வாக அமைக்கப்பட்டமையினால் வீதியிலிருந்து விளையாட்டு மைதானத்திற்கு நடந்து செல்வதற்கோ அல்லது உள்நுழைவதற்கோ முடியாத நிலைக்குள்ளாகியிருந்தது.

(ஆ) குறுவிட்ட பிரதான அலுவலகத்திற்கு முன்னால் நுழைவு வீதிக்கு கல் பரவுதல், புற்பிடி பதித்தல் மற்றும் பூக்கள் நட்டும் வேலையின் கீழ் ரூபா 82,444 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அது உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமையின் காரணமாக 2016 திசெம்பர் 23 ஆந் திகதியளவில் புற்பிடிகள்

அழிவடைந்திருந்ததுடன் செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினத்திற்குட்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட குறுவிட்ட பிரதேச சபைக் கட்டிடத்தின் முன்பக்கம் வலை அடித்தல், புற்பிடி பதித்தல் மற்றும் பூக்கள் நட்டும் வேலையில் ஒரு வேலை விடயத்தில் உள்ளபடியான அளவிடைக்கு மேலாக ரூபா 46,043 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 03 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.3 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | (i) | நிதிக்கூற்றுக்களின் பெறுமதியும் குறிப்புக்களின் பெறுமதியும் இணங்காமை |
| | (ii) | பேரேட்டுக் கணக்குகளும் பட்டோலைகளும் இணங்காமை |
| | (iii) | கணக்குகளிலிருந்து கைவிடல் |
| | (iv) | உறுதிப்படுத்தும் சான்றுகள் காணப்படாமை |
| | (v) | கடன்கொடுத்தோர் பதிவேடு சமப்படுத்தப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் இனங்காணப்படாமை |
| | (ii) | வருமான அறவிடப்படாமை |
| (இ) சொத்துக் கட்டுப்பாடு | | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற சொத்துக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமை. |